செ.வெ. எண்: 140 நாள்: 22,02,2012

**<u>பத்திரிக்கை செய்திக் குறிப்பு</u>**

தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம் அவர்களிடமிருந்து 90 தையல் ஆசிரியர்கள், 309 ஓவிய ஆசிரியர்கள் மற்றும் 39 இசை ஆசிரியர்கள் பணிக்காலியிடங்களுக்கான காலியிட அறிவிக்கை பெறப்பட்டது. இப்பணிக் காலியிடங்கள் மாநில அளவில் அமைந்த 31.1.2012 அன்றைய நிலவரப்படி தகுதியுள்ள வேலைவாய்ப்பக பதிவுதாரர்களின் பெயர், பதிவு மூப்பு விவரங்கள், பாடவாரியாகவும், இனவாரியாகவும் {HYPERLINK "http://www.tn.gov.in"} என்கிற தமிழக அரசின் இணைய தளத்தினில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இவ்விணைய தளத்தில் மேற்கூரிய பணியிடங்களுக்கான கல்வித் தகுதி, வயது வரம்பு, இன சுழற்சி விவரங்கள் ஆகியவற்றையும் காணலாம். மேற்படி இணைய தளத்தில் மனுதாரர்கள் தங்களது பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பரிந்துரை பதிவு மூப்பு தேதிக்குள் தகுதியுள்ள மனுதாரர்கள் எவரும் விடுபட்டிருப்பின் அவர்கள் தாங்கள் பதிவு செய்துள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தினை உரிய ஆதாரத்துடன் <u>27.02.2012</u> தேதிக்குள் நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. <u>27.02.2012</u> தேதிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளும் மனுதாரர்களின் கோரிக்கை ஏதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**